# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

அரையாண்டுத்தேர்வு 2007-2008

**தமிழ்மொழி - வளர்நிலை 3**

| | |
|---|---|
| வினா 1 | **அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களில் மிகப்பொருத்தமானதைத் தெரிந்து, கீறிட்ட இடங்களில் எழுதுக.** |
| நோக்கம்: | பாடநூல் அடைவை அளவிடல். |
| புள்ளி : | - சரியான தெரிவுக்கு முழுப்புள்ளி.<br>- கீறிட்டு எழுதத் தவறினால் ஒரு வினாவுக்கு 0..5 புள்ளி கழிக்கவேண்டும்.<br>- பார்த்தெழுதும்போது எழுத்துப்பிழையிருப்பின் 0.5 புள்ளி கழிக்கவேண்டும். |
| விடை: | **சிலப்பதிகாரம், போனோம், விருந்தினரை உபசரித்தல், பூத்திருக்கும், தெளிவு, தொள்ளாயிரம், நடுகல், அனுப்பப்பட்டது, 1330, திருக்குறள், வன்னி, ஔவையார், வாங்கினார்கள், பசுமையாக, நிற்க, புரட்டாதி, நாட்டுப்பற்று, தெற்கு, முத்தமிழ், உடற்பயிற்சி,** |

| | |
|---|---|
| வினா 2 | **தரப்பட்டுள்ள சொற்களில் மிகப்பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடங்களில் எழுதுக.** |
| நோக்கம்: | அடுக்குத்தொடர் ஒலிக்குறிப்புச் சொற்களை இடமறிந்து எழுதுதல். |
| புள்ளி : | - சரியான நிரப்பலுக்கு முழுப்புள்ளி.<br>- எழுத்துப்பிழைக்கு ஒவ்வொரு சொல்லுக்கும் 0..5புள்ளி கழிக்கவேண்டும். |
| விடை: | **மளமள, குடுகுடு, கீச்கீச், விடியவிடிய, அங்கும் இங்கும்** |

| | |
|---|---|
| வினா 3 | **கீழ்க்காணும் பகுதியை வாசித்து, தரப்பட்டுள்ள சொற்களில் இருந்து பொருத்தமானதைத் தெரிந்து கீறிட்ட இடங்களில் எழுதுக.** |
| நோக்கம்: | கட்டங்களிலுள்ள எழுத்துக்கட்டங்களின் வெற்றிடங்களை நிரப்பி பழங்கள், காய்கறிகள் ஆகியவற்றின் பெயர்களை இனங்காணல். |
| புள்ளி : | - வெற்றிடத்தை நிரப்புவதற்கு 0,5 புள்ளி (ஒரு எழுத்துக்கு அரைப்புள்ளி)<br>- சொற்களை எழுதுவதற்கு 0,.5 புள்ளி (ஒரு சொல்லுக்கு அரைப்புள்ளி)<br>- பழங்கள், காய்கறிகள் தவிர்ந்த சொல்லுருவாக்கத்திற்கு புள்ளியில்லை. |
| விடை: | **கொய்யா, பப்பாளி, திராட்சை, வாழை, பலா, பூசினி, வெண்டை, கத்தரி, பாகல், கீரை** |
| குறிப்பு: | சொற்கள் தொடங்கும் இடங்களை அம்புக்குறி மூலம் குறிப்பது ஆண்டிறுதியில் கவனத்தில் எடுக்கப்படும். |

**வினா 4** **பார்த்து, உறுப்பமைய எழுதுக.**

**நோக்கம்:** உறுப்பமைய எழுதுதல்.

**புள்ளி :**
- எழுத்துப்பிழை (0..5)
- நிறுத்தற் குறி (0..5)
- இடைவெளிகள் (எழுத்து, சொல்) / நிலையொழுங்கு (0..5)
- எழுத்தளவு, மேல் / கீழ் விசிறிகள் (0..5)

**தனித்தனி 0..5புள்ளி கழிக்கப்படும்.**

**வினா 5** **ஒழுங்குபடுத்தி எழுதுக.**

**நோக்கம்:** வாக்கியம் உருவாக்குதல்.

**புள்ளி :**
- சரியாக வாக்கியம் எழுதப்பட்டால் 2 புள்ளிகள்.
- சரியாக வாக்கியம் எழுதப்பட்டு எழுத்துப்பிழையிருப்பின் 1 புள்ளி.

விடை:

**பல் துலக்கி முகம் கழுவு.**
**பனிக்கரடிகள் நன்றாக நீந்தும்.**
**யானை காட்டில் வாழும் மிருகம்.**
**அறம் செய்ய விரும்பு.**
**வைகாசிக்கு அடுத்த மாதம் ஆனி.**

**வினா 6** **கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை எழுதி, வாக்கியங்களை நிறைவு செய்க.**

**நோக்கம்:** வாக்கிய முடிவைச் சரியாக உற்றுணர்தல்.

**புள்ளி :**
- சரியான முற்றுவினைக்கு முழுப்புள்ளி. (திணை, பால், எண், இடம், காலம்)
- வினையடி மாறிய ஓரளவு பொருந்திய விடைக்கு 1 புள்ளி.

விடை:

**அடைந்தான்/அடைந்தார், ஆண்டார்கள், வேண்டும், எழுதப்பட்டது, மகிழ்ந்தனர்.**

**வினா 7** **கீழுள்ள பகுதியை வாசித்து, தரப்பட்டுள்ள சொற்களில் பொருத்தமான சொற்களைத் தெரிந்து எழுதுக.**

**நோக்கம்:** பந்தியிலுள்ள பொருளை முன்னுணர்ந்து கீறிட்ட இடங்களைச் சரியாக நிரப்புதல்.

**புள்ளி :**
- முழுமையாக நிரப்பவேண்டும்.
- ஒன்றுக்கு இரண்டு புள்ளிகள்.
- எழுத்துப்பிழைக்கு 0..5புள்ளி கழிக்கவேண்டும்.

விடை: **கருவிகள், கலைஞர்கள், வீணையிசை, நன்றாக, கோதை**

**வினா 8** **கீழே உள்ளவற்றை பொருத்தமாக இணைத்துக்காட்டுக.**

**நோக்கம்:** **சொற்களை இணைத்து வாக்கியமாக்குதல்.**

**புள்ளி :**
- சரியாக வாக்கியம் இணைக்கப்பட்டால் 1 புள்ளி.
- பிழையான இணைப்புக்குப் புள்ளியில்லை.

விடை:
**செண்பகம் தமிழீழத்தின் தேசியப்பறவை.**
**பாரி இரக்க குணமுடையவன்.**
**நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.**
**தைப்பொங்கல் தமிழரின் திருநாள்.**
**ஒளவையார் ஒரு பெண்புலவர்.**

**வினா 9** **தரப்பட்டிருக்கும் பகுதியை வாசித்து, கீழேயுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.** (புள்ளிகள் 10 எனக் கொள்க.)

**நோக்கம்:** ஓர் உரைத்தொகுதியை வாசித்து விளங்கி விடையளிக்க அறிதல்.

**புள்ளி :**
- முழுமையான வாக்கிய விடைக்கு 2 புள்ளிகள்.
- விடைகள் இயல்பு நடையில் அமையினும் 2 புள்ளிகள்.
- சரியான விடையிருந்தும் முழுமையின்றேல் 1 புள்ளி மட்டும்.
- மயக்க விடைகளுக்குப் புள்ளியில்லை.
- எழுத்துப் பிழையிருப்பின் ஒல்வொன்றுக்கும் 0.5 குறைத்தல்.

விடை:
**ஒளவையாரின் பாடல்கள் நல்ல அறிவைத்தரும்.**

**அவருடைய பாடல்கள் இலகுவான சொற்களில் அமைந்து உள்ளன.**

**அவர் எழுதிய நூல்களில் ஒன்று ஆத்திசூடி/கொன்றைவேந்தன்.**

**அவரை ஒளவைப்பாட்டி என்றும் அழைப்பர்.**

**எனக்குத் தெரிந்த வேறு இரு புலவர்களின் பெயர்கள் திருவள்ளுவர், சோமசுந்தரப்புலவர்.**

**வினா 10** **படத்தைப் பார்த்து, ஐந்து வாக்கியங்கள் எழுதுக.**

**நோக்கம்:** சிந்தனை உருவாக்கத்தையும் பேச்சுத்திறனையும் கண்டறிதல்.
தனது எண்ணக்கருவை எழுத்தில் ஒழுங்குற வெளிப்படுத்துதல்.

**புள்ளி :**
- முழுமையான கதையமைப்புள்ள வாக்கியங்களுக்கு முன்னுரிமை.
- முழுமையான கருத்தோட்டமுள்ள வாக்கிய இணைப்பிற்கு முன்னுரிமை.
- உறுப்பமைந்த வெறுமையான வாக்கியங்களுக்கு அரைவாசிப்புள்ளியும் அதற்குக் கீழும். எழுத்துப் பிழையிருப்பின் வாக்கியத்திற்கு 0.5புள்ளி கழித்தல்.